**Source:** *Tamil Murasu*, p10
**Date:** 23 September 2026

கேரளாவைப் பூர்வீகமாகக் கொண்ட டாக்டர் கிளென் போனி மிக முக்கிய புற்றுநோய் ஆய்வுக்குத் தலைமை ஏற்றுள்ளார்

# புற்றுநோய் ஆய்வில் மருத்துவ நிபுணர்

இருபது ஆண்டுகளுக்கும் மேலாக சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தின் (என்யுஎஸ்) இணைப் பேராசிரியர் கிளென் போனி மருத்துவத் துறைக்கு பெருஞ்சவாலாக அமைந்த புற்றுநோய்க்கு எதிராகப் போராடிவருகிறார்.

உலகிலேயே மிகவும் சிக்கலான கணையம் சார்ந்த அறுவை சிகிச்சைகளை அவர் ஒவ்வொரு வாரமும் மேற்கொள்கிறார். மருத்துவத் துறையில் அறுவை சிகிச்சைகள் எவ்வளவோ மேம்பட்டிருந்தாலும் பல நோயாளிகள் அதே புற்றுநோய்ப் பிரச்சினையை சில ஆண்டுகளில் மீண்டும் எதிர்நோக்குகின்றனர்.



சிங்கப்பூரில் புற்றுநோய் குறித்த மிக முக்கிய ஆய்வுகளில் ஒன்றுக்குத் தலைமைதாங்கும் டாக்டர் கிளென் போனி.



சிகிச்சை பெற்ற நோயாளிகளில் பாதிப்பேருக்கு மூன்று ஆண்டுகளில் மீண்டும் அந்நோய் பாதிக்கிறது என்றார் டாக்டர் கிளென் போனி. **படங்கள்: கிளென் போனி**

## பற்பல ஆய்வுகள்

'ஃபவுன்டேஷன் ஹெல்த்கேர்' அமைப்பின் 'பான்ஏஷியா சர்ஜரி' குழுமத்தில் கல்லீரல், கணைய உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை நிபுணரும் மூத்த ஆலோசகருமான டாக்டர் கிளென் போனி கடந்த பத்து ஆண்டுகளாக பற்பல ஆய்வுகள் வழியாகப் புற்றுநோய்க்கான தீர்வுகளைத் தேடிவருகிறார்.

அதன்பயனாக சிங்கப்பூரின் மிகவும் முக்கியமான நம்பிக்கையளிக்கும் ஆய்வுகளில் ஒன்றை அவர் தலைமை ஏற்று வழிநடத்திவருகிறார்.

அவர் வடிவமைத்துள்ள அடுத்த தலைமுறைக்கான தடுப்பூசி சிகிச்சை முறையின்படி, ஒருவரின் உடலில் இயங்கும் நோய் எதிர்ப்பு உயிரணுக்கள் கணையப் புற்றுநோயைத் தானாக அடையாளம் கண்டு அழிக்க உதவும் சாத்தியம் ஏற்பட்டுள்ளது.

ஆய்வில் கண்டறியப்பட்ட தடுப்பூசி சார்ந்த அறிவியலுக்கு என்யுஎஸ்ஸின் இணைப்பேராசிரியர் லே தி நுயெட் மின் தலைமை ஏற்றார். அத்தடுப்பூசியின் ஊக்கமளிக்கும் முடிவுகள் மருத்துவ முறைகளுக்கு முந்தைய ஆய்வுக் கட்டுரைகளில் வெளியிடப்பட்டன. அவை அடுத்த 12 முதல் 18 மாதங்களில் முதன்முறையாக மனிதர்களிடம் சோதிக்கப்படவுள்ளன.

## எளிதில் கண்டறியமுடியாதக் கணையப் புற்றுநோய்

"கணையப் புற்றுநோயை மிகவும் சிரமப்பட்டு பராமரிக்க வேண்டியுள்ளது," என்று தப்லா வார இதழுக்கு வழங்கிய பேட்டியில் டாக்டர் போனி விளக்கினார். மிகவும் மெதுவாக அப்புற்றுநோய் பரவுவதால் அதனை எளிதில் கண்டறியமுடியாது.

"ஒருவேளை கண்டறியப்பட்டாலும், உடலின் நோய் எதிர்ப்பு மண்டலத்திடமிருந்து தப்பிப்பதில் இப்புற்றுநோய் மிகவும் திறம்படச் செயல்படுகிறது," என்றார் அவர்.

சிங்கப்பூரின் மருத்துவத் துறை முக்கியக் கட்டத்தை எட்டியிருக்கும் வேளையில் இந்த ஆய்வு நடந்துவருகிறது.

## சிங்கப்பூரில் அதிகமாகப் பரவும் புற்றுநோய்

அனைத்துலக அளவில் மேற்கொள்ளப்பட்ட பல அண்மைய ஆய்வுகளில் குடியரசில் கணையப் புற்றுநோய் விகிதம் ஆண், பெண் இருபாலரிடமும் உலகிலேயே மிக வேகமாகப் பரவிவருவதாக அறியப்பட்டுள்ளது. அது ஏன் என்பதை அறிய ஆய்வாளர்கள் ஆய்வில் ஈடுபட்டுள்ளனர். நீரிழிவு நோய், கொழுப்பு நிறைந்த கணையம் ஆகியன அதற்கான காரணங்களாக அமையலாம் என்று டாக்டர் போனி தெரிவித்தார்.

## அறிகுறிகள்

அதைவிடக் கவலையளிக்கும் செய்தி என்னவென்றால், கணையப் புற்றுநோயின் அனைத்துக் கட்டங்களும் ஆபத்தானதே. அதனை ஆரம்பத்திலேயே கண்டறிவதால் அதனை முற்றிலும் தடுக்கமுடியும் என்பதில்லை.

வயிற்றுப் பகுதியின் உட்புறம் கணையம் ஆழமாக மறைந்து இருப்பதும் அதில் புற்றுநோய்க் கட்டிகள் உருவெடுத்தபின்புதான் அவற்றைக் கண்டறியமுடியும் என்பதும் அதன் ஆபத்துகள். அறிகுறியின்றி ஏற்படும் புதியவகை நீரிழிவு, எடை குறைவு, விரைவாக ஏற்படும் மஞ்சள் காமாலை போன்றவை அதன் ஆரம்பக்கட்ட அறிகுறிகள். அவற்றை அலட்சியப்படுத்தி நிராகரிக்கக்கூடாது.

கணையப் புற்றுநோயைப் பராமரிப்பது மிகக் கடினமாகும். அதில் 20 விழுக்காடு, புற்றுநோய் உயிரணுக்களைக் கொண்டவை. எஞ்சிய 80 விழுக்காடு அடர்த்தியான ஸ்ட்ரோமா எனப்படும் நார்த்திசுக்கள் நிறைந்தவை. அவை புற்றுநோய் அணுக்களை அரண்போல பாதுகாக்கின்றன. அதனால் பல புற்றுநோய் எதிர்ப்பு மருந்துகளும் நோய் எதிர்ப்பு உயிரணுக்களும் புற்றுநோயை நெருங்கமுடிவதில்லை.

கணையப் புற்றுநோய்க்கெனத் தடுப்பூசிகள் இல்லை. ஆய்வில் வடிவமைக்கப்பட்டுள்ள தடுப்பூசிகள் நோயாளியின் உடலில் உள்ள நோய் எதிர்ப்புக் கட்டமைப்பை உயிர்த்தெழச் செய்ய உதவும் தன்மையுடவை என்று டாக்டர் போனி கூறினார்.

ஆய்வுக் கூடத்தில் விலங்குகளில் செலுத்தப்பட்ட தடுப்பூசி, புற்றுநோய் வளர்ச்சியைக் குறிப்பிடத்தக்க வகையில் பாதுகாப்பாகக் குறைத்துள்ளது. மனிதர்களில் செலுத்திச் சோதிக்கும் ஆய்வுகள் விரைவில் தொடங்கப்படும் என்ற டாக்டர் போனி, மருத்துவ அமைப்புகளும் அரசாங்கமும் ஆய்வுக்கென நிதி உதவிகள் வழங்கியுள்ளதையும் தெரிவித்தார். அவர் இதுவரை 3,000க்கும் மேற்பட்ட சிக்கலான அறுவைச் சிகிச்சைகளைச் செய்துள்ளார்.

டாக்டர் போனியின் தாய்வழி தாத்தா கேரளாவின் பாலக்காட்டில் பிறந்து பத்தொன்பது வயதில் மும்பை சென்று அங்கிருந்து கப்பலில் மலேயா வந்து ரப்பர் தோட்டத்தில் பணியாற்றினார். திருவனந்தபுரத்தில் பிறந்து அங்கு வாழ்ந்த அவரது பாட்டியைச் சந்தித்து அவரது தாத்தா திருமணம் செய்துகொண்டார். "கேரளத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர் என்பதில் எனக்குப் பெருமை," என்றார் மருத்துவ நிபுணர் கிளென் போனி.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.